**அனுப்புநர்**

தண்.வசுந்தராதேவி,
எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்

**ந.க.எண். 242170 /எச்.எப்1/2018** **நாள்.17.12.2018**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – மார்ச்/ஏப்ரல் 2019 – பள்ளி மாணாக்கரின் பெயர்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளுதல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :**
1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:07.09.2018.
2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்.12.10.2018.

------

பார்வை 1–ல் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளில், மார்ச்/ஏப்ரல் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டு பயிலும் மாணாக்கர்களது விவரங்களை **10.09.2018 முதல் 22.09.2018** வரையிலான நாட்களில் EMIS Portal-ல் சென்று பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. அவ்வாறு பதிவேற்றம் செய்யப்பட்ட மாணாக்கர்களது விவரங்களை சரிபார்த்து, மொழிப்பாட விலக்கு, பயிற்று மொழி மாற்றம் போன்ற கூடுதல் விவரங்களை 15.10.2018 முதல் 27.10.2018 வரையிலான நாட்களில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யுமாறு பார்வை 2–ல் காணும் இவ்வலுவலகக் செயல்முறைகளில் அறிவுறுத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்ட செயல்முறைகளில் அறிவுறுத்தியவாறு, மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்த விவரங்களின் அடிப்படையில் மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும், பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றி மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்து, திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

...2...

1. அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களும் 18.12.2018 முதல் 24.12.2018 வரையிலான நாட்களில் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான தங்கள் பள்ளி மாணாக்கரின் பெயர்ப் பட்டியலை பதிவிறக்கம் செய்து, பெயர்ப்பட்டியலில், மாணாக்கரது பெயர், பிறந்ததேதி, பாடத்தொகுப்பு உள்ளிட்ட விவரங்களில் திருத்தங்கள் இருப்பின், பள்ளித் தலைமையாசிரியர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களிலேயே திருத்தங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும். ஏற்கனவே பதிவேற்றம் செய்யாமல் விடுபட்டிருந்த மாணாக்கரது விவரங்களையும் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

2. பெயர்பட்டியலில் கூடுதலாக பெயரை சேர்க்கவோ (Addition)/ நீக்கவோ (Deletion) வேண்டி இருப்பின், அதனையும் மேற்குறிப்பிட்ட நாட்களில் செய்துகொள்ளலாம். **ஆனால், பள்ளியில் மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படாதவரை மாணாக்கரது பெயரை, பெயர்ப்பட்டியலில் இருந்து எக்காரணம்கொண்டும் நீக்கம் (Deletion) செய்யக் கூடாது.** மாற்றுச் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னரே பெயர்ப்பட்டியலில் இருந்து மாணவரது பெயரை நீக்கம் செய்ய வேண்டும்.

3. **பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதிய பின்னர், அரசிதழில் (Gazette) பதிவு செய்து பெயர் மாற்றம் செய்த மாணாக்கர்களுக்கு மட்டும், பத்தாம் வகுப்பு சான்றிதழில் உள்ளவாறு இல்லாமல் அரசிதழில் உள்ளவாறு பெயரை மாற்றம் செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.**

4. மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான பெயர்ப்பட்டியலில் திருத்தம் மேற்கொள்வதற்கு வழங்கப்படும் இவ்வாய்ப்பினை அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்கு பிறகும் திருத்தங்கள் மேற்கொள்ளவில்லையெனில், சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரே அதற்கு முழுப் பொறுப்பேற்க நேரிடும்.

5. பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்வது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கு, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள அந்தந்த மாவட்டத்தில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களின் அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவேண்டும்.

**இணைப்பு:** பட்டியல்

**ஒம்/–**

**இயக்குநர்**

**<u>நகல்:</u>**

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் } – தகவலுக்காக
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் }